# 08 ஆகஸ்ட் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்

### 08 ஆகஸ்ட் 2023 – வெள்ளையனே வெளியேறு இயக்க நாள்

- ஆகஸ்ட் 8, 1942 அன்று பம்பாயில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 'வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை' தொடங்கினார்.
- இது ஆகஸ்ட் இயக்கம் அல்லது ஆகஸ்ட் கிராந்தி என்றும் அழைக்கப்படுகிறது.
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது மகாத்மா காந்தி "செய் அல்லது செத்து மடி" என்ற முழக்கத்தை கொண்டு வந்தார்.

## நியமனம்

### புதிய ரயில்வே அதிகாரிகள் நியமனம்

- தெற்கு ரயில்வேயின் புதிய முதன்மை தலைமை செயல்பாட்டு மேலாளராக என். ஸ்ரீகுமார் பொறுப்பேற்றுள்ளார்.
- ரயில்வேயின் முதன்மை தலைமை வணிக மேலாளராக இருந்த பி. ரவீந்திரன் ஜூலை 31–இல் ஓய்வு பெற்ற நிலையில் தெற்கு ரயில்வேயின் முதன்மை தலைமை செயல்பாட்டு மேலாளரான நீன்ல்த்யோரா, ரயில்வேயின் புதிய முதன்மை தலைமை வணிக மேலாளராக பொறுப் பேற்றுள்ளார்.
- என்.ஸ்ரீகுமார், இதற்கு முன்பாக தென்கிழக்கு மத்திய ரயில்வேயில் முதன்மை தலைமை வணிக மேலாளராக பணியாற்றி வந்தார்.

## விளையாட்டு

### சர்வதேச பாரா பாட்மின்டன்: இந்தியாவுக்கு 18 பதக்கங்கள்

இங்கிலாந்தில் நடைபெற்ற 4 நாடுகள் சர்வதேச பாரா பாட்மின்டன் போட்டியில் இந்தியாவுக்கு 3 தங்கம், 5 வெள்ளி, 10 வெண்கலம் என 18 பதக்கங்கள் கிடைத்தன.

**தங்கப் பதக்கம்**

- கிருஷ்ணா நாகர் (ஆடவர் ஒற்றையர்)
- பிரமோத் பகத்/சுகந்த் கடம் இணை (ஆடவர் இரட்டையர்)
- மானசி ஜோஷி/துளசிமதி முருகே சன் (மகளிர் இரட்டையர்)

**வெள்ளிப் பதக்கம்**

- பிரமோத் பகத் (ஆடவர் ஒற்றையர்)
- நித்யஸ்ரீ (மகளிர் ஒற்றையர்)
- மனோஜ் சர்கார்/தீப் ரஞ்சன் பிசோயீ (ஆடவர் இரட்டையர்)
- சிராக் பரே தா/ராஜ் குமார் (ஆடவர் இரட்டையர்)

SHANMUGAM IAS ACADEMY

- பிரமோத்/மனீஷா ராம்தாஸ் ஜோடி (கலப்பு இரட்டையர்)

**வெண்கலப் பதக்கம்**

- நிதேஷ் குமார் (ஆடவர் ஒற்றையர்)
- சுகந்த் கடம் (ஆடவர் ஒற்றையர்)
- மானசி ஜோஷி (மகளிர் ஒற்றையர்)
- மன்தீப் கௌர் (மகளிர் ஒற்றையர்)
- மனீஷா ராம்தாஸ் (மகளிர் ஒற்றையர்)
- நிதேஷ்/தருண் தில்லன் (ஆடவர் இரட்டையர்)
- பாருல் சௌதரி/சந்தியா (மகளிர் இரட்டையர்)
- கிருஷ் ணா/நித்யஸ்ரீ (கலப்பு இரட்டையர்)
- மானசி/ருத்திக் ரகுபதி (கலப்பு இரட் டையர்)
- பிரேம்/எமினே (கலப்பு இரட்டையர்)

## காவல் துறைகளுக்கு இடையே சர்வதேச அளவில் போட்டி: 3 பதக்கங்களை வென்ற சென்னை பெண் காவலர்

- காவல்துறை, தீயணைப்புத் துறையினருக்கு இடையேயான சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டி கனடா நாட்டின் வின்னிபெக்கில் ஜூலை மாதம் 28ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 6ஆம் தேதி வரை நடைபெற்றது.
- இந்த போட்டியில் தமிழக காவல்துறை சார்பில் காவல் கரங்கள் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரியும் லீலா ஸ்ரீ, என்பவர் கலந்து கொண்டார்.
- இதில் 100 மீட்டர் தடை தாண்டும் ஓட்டம், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், 200 மீட்டர் ஓட்டம், நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல், 800 மீட்டர் ஆகியவை அடங்கிய 'ஹெப்டத்லான்' பிரிவில் தங்க பதக்கம், 400 மீட்டர் தடை ஓட்டத்தில் வெள்ளி பதக்கமம், உயரம் தாண்டுதலில் வெண்கல பதக்கம் என 3 பதக்கங்களை லீலா ஸ்ரீ பெற்று தமிழக காவல்துறை மற்றும் சென்னை காவல்துறைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## சந்திரயான்–3 விண்கலம் நிலவை நோக்கி

- ஆகஸ்ட் 5 அன்று சந்திரயான்–3 விண்கலம் சந்திரனின் சுற்றுப்பாதையில் முதல் முறையாக நுழைந்தபோது இஸ்ரோ வெளியிட்ட முதல் படம் பதிவு செய்யப்பட்டது.
- நிலவின் தென் துருவப் பகுதியில் ஆய்வு மேற்கொள்வதற்காக சந்திரயான்–3 விண்கலம் செலுத்தப்பட்டுள்ளது.



SHANMUGAM IAS ACADEMY

## தமிழ்நாடு செய்திகள்

### 86,000 பேருக்கு சிறப்பு தடுப்பூசி முகாம் தொடக்கம்

- மத்திய அரசின் 'இந்திரதனுஷ் 5.0" திட்டத்தின் கீழ் விடுபட்ட 86 ஆயிரம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக் கான சிறப்பு தடுப்பூசி முகாம் தமிழகத்தில் தொடங்கியது.
- சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அந்த முகாமை தொடக்கி வைத்தார்.
- அதைத் தொடர்ந்து தடுப்பூசி முகாம் குறித்த விழிப்பு ணர்வு பிரசாரத்தையும், தடுப்பூசி சான்றிதழை டிஜிட்டல் முறையில் பதிவேற்றும் யூ –வின் செயலி பயன்பாட்டையும் தொடங்கி வைத்தார்

- தமிழகத்தில் 1985–ஆம் ஆண்டு முதல் நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- அதன் கீழ் 11 வகை தடுப்பூசிகள் வழங்கப்பட்டு, நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.
- ஆண்டுதோறும் ஏறத்தாழ 10 லட்சம் கர்ப்பிணிகள், 9.16 லட்சம் குழந்தைகளுக்கு தடுப்பூசி தவணை கள் செலுத்தப்படுகின்றன.
- 2014– ஆம் ஆண்டு முதல்4 கட்டங்களாக நடைபெற்று வரும் இந்திரதனுஷ் திட்டத்தின் மூலம் 1, 72,365 கர்ப்பி ணிகள் மற்றும் 6, 94,083 குழந்தைக ளுக்கு 2, 98,123 முகாம்களின்மூலம் விடுபட்ட தடுப்பூசி தவணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் நிகழாண்டில் இந் திரதனுஷ் 5.0 திட்டம் மூன்று சுற்றுகளாக நடத்தப்படுகிறது. முதல் சுற்று ஆகஸ்ட் 7 தொடங்கி வரும் 12–ஆம் தேதி வரையிலும், இரண்டாம் சுற்று செப்டம்பர் . 11–இல் தொடங்கி 16–ஆம் தேதி வரையிலும், மூன்றாம் சுற்று அக்டோபர் 9–இல் தொடங்கி 14–ஆம் தேதி வரையிலும் நடைபெறுகிறது.
- தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய் ஒழிப்பதற்கு விடுபட்ட தவணைகள் அப்போது செலுத்தப்படும்.
- தமிழகத்தில் 72,760 குழந் தைகள், 14,180 கர்ப்பிணிகள் என மொத்தம் 86,940 பேர் தடுப்பூசி செலுத்தாமல் தவறவிட்டுள்ளனர்.
- இந்தத் திட்டத்தில் தட்டம்மை மற்றும் ரூபெல்லா, நிமோனியா மற்றும் போலியோ தடுப்பூசி கள் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- செலுத்தப்படும் தடுப்பூசி விவரங்கள் யூ–வின் தளத் தில் பதிவேற்றம் செய்யப்படும். மாநிலத்தில் அனைத்து வகை தடுப்பூசிகளும் போதிய அளவில் கையிருப்பில் உள்ளன

### நான் முதல்வன்' திட்டத்தில் இலக்கை தாண்டி சாதனை 13 லட்சம் பேருக்கு உயர் தர திறன் பயிற்சி

- 'நான் முதல்வன்' திட்டம் தொடங் கப்பட்டு முதல் ஆண்டிலேயே 13 லட்சம் மாணவர்களுக்கு, உயர் தரத்தில் திறன் பயிற்சி வழங் கப்பட்டுள்ளது.
- இதுதான் இத்திட்டத்தின் மிகப்பெரிய சாதனை என்று ஓராண்டு வெற்றி விழாவில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார். 'நான் முதல்வன்" திட்டத்தின் ஓராண்டு வெற்றி விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங் கில் முதல்வர் ஸ்டாலின் தலைமை யில் நேற்று மாலை நடைபெற்றது.
- ஹேக்கத் தான் 'நிரல் திருவிழா' போட்டிக் கான இணையதளத்தை தொடங்கி வைத்தார்,

- அண்ணா பல்கலைக் கழகம், 459 பாலிடெக்னிக், 432 ஐடிஐகளில் தொழில்சார் படிப்புகளை தொடங்கி வைத்தார்
- 'கலைஞர்100" இணையதளத்தை தொடங்கி வைத்ததுடன், நான் முதல்வன் கீதத்தையும் (Anthem) அறிமுகம் செய்து வைத்தார்.
- 2022 மார்ச் 1–ம் தேதி தொடங்கிய இத்திட்டம் ஓராண்டை நிறைவு செய்கிறது.
- ஆண்டுக்கு 10 லட்சம் பேருக்கு திறன் பயிற்சி முதல் இலக்கு
- முதல் ஆண்டிலேயே 13 லட்சம் மாணவர் களுக்கு, உயர் தரத்தில் திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.இது தான் இத்திட்டத்தின் மிகப்பெரிய சாதனை.
- இப்படி பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு மிகச்சிறந்த வேலைவாய்ப்பு கிடைத்திருப்பது அடுத்த சாதனை.
- இத்திட்டத்தில் 445 பொறியியல் கல்லூரிகளில் திறன் பயிற்சி பெற்ற 85,053 பொறியியல் பட்டதாரிகளில், 65,034 பேரும், 861 கலைக் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற 99,230 மாணவர்களில் 83,223 பேரும் பணி நியமனம் பெற்றுள்ளனர்.
- 5,844 பொறியியல் மாணவர்கள், 20,082 கலை, அறிவியல் மாணவர் களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.
- 'கல்லூரி கனவு திட்டத் தில் 75 ஆயிரம் பேரும், 'உயர்வுக்குப் படி' திட்டத்தில், 2.50 லட்சம் பேரும், 'நான் முதல்வன்' இணையதளம் மூலம் 25 லட்சம் பேரும் பயனடைந்துள்ளனர்.
- தமிழகம் முழுவதும் அடுத்த மாதம் நடத்தப்படும் தமிழ்நாடு திறன் போட்டிகளுக்கு இதுவரை 58 ஆயிரம் மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.
- குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழக மாணவர்களின் தேர்ச்சி நாளுக்கு நாள் குறைந்து வருவது வருந்த வைக்கிறது. அதற்கா கவே, நான் முதல்வன் திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய அரசு பணி களுக்கான போட்டித் தேர்வு பயிற்சி பிரிவு உருவாக்கப்பட்டு. ஊக்கத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாலிடெக்னிக், ஐ.டி.ஐ.களுக்கு 'நான் முதல்வன்' திட்டம் விரிவாக்கம்

- 'இந்த விரிவாக்கத் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆகஸ்ட் 7 ம் தேதி தொடங்கி வைத்தார்.
- 'நான் முதல்வன்' திட்டத்தின் ஓராண்டு நிறைவு விழா, சென்னையில் நடைபெற்றது.
- , நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்ப வடிவமைப்புகள் காட்சிப்படுத் தப்பட்டன.
- திட்டம் விரிவாக்கம்: அரசு கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் தொடங்கப் பட்ட 'நான் முதல்வன்' திட்டமானது பாலிடெக்னிக் கல்லூரிகள், ஐடிஐ. ஆகியவற்றுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- மாணவர்களின் படைப்பாற்றலையும், புத்தாக்க திறனையும் ஊக்கு விக்கும் வகையில் அவர்களுக்கான பிரத்யேக இணையதளம் வடிவ மைக்கப்பட்டுள்ளது.
- புதிய பாடப் பிரிவுகள்: இளங் கலை தொழில் கல்வியை முன்னெ டுத்து தொழில்முனைவோரை உருவாக்கும் வகையில் முக்கியப் பல்க லைக்கழகங்களில் பிரத்யேகபாடப் பிரிவுகளை தொடங்க அரசு முடிவு செய்தது.

SHANMUGAM IAS ACADEMY

- அதன்படி, அண்ணா பல்க லைக்கழகத்தின் கீழ், காலணி உற் பத்தி தொழில்நுட்பம், ஆயத்த ஆடை உற்பத்தி, சரக்கு நகர்வு மேலாண்மை ஆகிய பிரிவுகளில் இளங்கலை தொழிற்கல்வி என்ற புதிய பட்டப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.
- 'நான் முதல்வன்' திட்டம் தொடங்கப்பட்டு முதல் ஆண்டிலேயே 13 லட்சம் மாணவர்களுக்கு, உயர் தரத்தில் திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதுதான் இத்திட்டத்தின் மிகப்பெரிய சாதனை

## 10 பேருக்கு காசோலை

- குடிமைப் பணி போட்டித் தேர்வுகளில் தமிழக இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்ய ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.
- நிகழாண்டில் குடிமைப் பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 10 பேருக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.25 ஆயிரத்துக்கான காசோலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

## உலக விண்வெளி அறிவியல் வரைபடத்தில்முக்கிய இடம்பெறப் போகும் குலசேகரன்பட்டினம் தூத்துக்குடி

- தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன் பட்டினத்தில் நாட்டின் 2-வது ராக் கெட் ஏவுதளம் அமைப்பதற்கான பணி விரைவில் தொடங்கவுள்ளது.
- இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ, சொந்த நாட்டு செயற்கைகோள்களை மட்டுமின்றி, பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்த செயற்கைகோள்களையும் குறைந்த கட்டணத்தில் விண்ணில் செலுத்தி வருகிறது.
- இதனால் பல நாடுகள் தொடர்ந்து தங்கள் செயற்கைகோள்களை ஏவ இந்தியாவை நாடி வருகின்றன.
- தற்போது ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் இருந்து ராக்கெட்டுகளை இஸ்ரோ ஏவி வருகிறது.

- பொதுவாக ராக்கெட் ஏவுதளம் அமையும் பகுதியானது, கடற்கரை யாகவும், காற்றின் வேகம் மணிக்கு 30கி.மீ.க்கு குறைவாகவும், குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகாத பகுதியாகவும், புயல், மின்னல் மற்றும் மழையின் தாக்கம் குறைவாக உள்ள பகுதியாகவும் இருக்க வேண்டும்.
- குலசேகரன்பட்டினத்தில் இஸ்ரோ ராக்கெட் ஏவுதளம் அமையவுள்ள பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம் குல சேகரன்பட்டினம் கடற்கரை பகுதி இந்த அம்சங்கள் அனைத்தும் நிறைந்த பகுதியாக கண்டறியப்பட்டது.
- கிழக்கு கடற்கரையை ஒட்டி யுள்ள குலசேகரன்பட்டினம் பகுதி யில் நாட்டின் 2-வது ராக்கெட் ஏவுதளத்தை அமைக்க இஸ்ரோ முடிவு செய்து, அதற்கான நடவ டிக்கைகளை மேற்கொண்டது. இங்கு சுமார் 2,300 ஏக்கர் நிலம் தமிழக அரசு சார்பில் கையகப்படுத் தப்பட்டு இஸ்ரோவிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.
- நிலநடுக்கோட்டுக்கு வடக்கே 8.364 டிகிரி தொலைவில் குலசேக ரன்பட்டினமும், 13.72 டிகிரி தொலை வில் ஸ்ரீஹறிகோட்டாவும் உள்ளன. எனவே, குலசேகரன்பட்டினத்தில் இருந்து ராக்கெட் ஏவும்போது அதி ர்களவில் எரிபொருள் மிச்சமாகும்.

SHANMUGAM IAS ACADEMY

- மேலும், ராக்கெட்டின் வேகத்தை நொடிக்கு அரை கிலோ மீட்டர் வீதம் அதிகரிக்க முடியும். எரிபொருள் செலவு குறையும் போது, ராக்கெட் சுமந்து செல்லும் செயற்கோள்களின் எடையையும் அதிகரிக்க முடியும்
- இந்திய அளவில் தசராவிழா வுக்கு புகழ்பெற்ற குலசேகரன்பட் டினம், மிக விரைவில் உலக விண் வெளி அறிவியல் வரைபடத்தில் முக்கிய இடம்பிடிக்கப் போகிறது.
- தகவல் தொடர்பு செயற்கை கோள்களை ஏவுவதற்கு மிகவும் உகந்த இடமாக குலசேகரன்பட்டி னம் இருக்கும்.
- அதுபோல தொலை உணர்வு செயற்கைகோள்களை ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்துஏவும்போது இலங்கை குறுக்கிடு வதால், முதலில் கிழக்கு நோக்கி செலுத்தப்பட்டு, பின்பு தெற்கு நோக்கி செயற்கைகோள் திசை திருப்பப்படுவதுவழக்கம். இதனால் கூடுதல் எரிபொருள் செலவாகி வந் தது.
- குலசேகரன்பட்டினத்தில் இருந்து தொலை உணர்வு செயற்கைகோள்களை ஏவும்போது நேரடியாக தெற்கு நோக்கி செலுத்த முடியும். இதனால் எரிபொருள் மேலும் மிச்சமாகும்.
- ராக்கெட்டுக்கான எரிபொருள், பாகங்கள் ஆகியவை திருநெல் வேலி மாவட்டம் மகேந்திரகிரியிலும், கேரள மாநிலம் தும்பாவிலும் தயாரிக்கப்படுகின்றன.

## தேசிய செய்திகள்

### ராகுல்காந்தி மீண்டும் எம்.பி. ஆனார்: 4 மாதங்களுக்கு பிறகு நாடாளுமன்றம்

- மேல்முறையீட்டு மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, ராகுல்காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனையை கடந்த 4–ந் தேதி நிறுத்தி வைத்தது.
- இந்த உத்தரவு, மக்களவை செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், ராகுல்காந்தியின் எம்.பி. பதவி தகுதிநீக்க உத்தரவை மக்களவை செயலகம் நேற்று திரும்ப பெற்றது.
- இதுதொடர்பாக மக்களவை செயலகம் வெளியிட்ட அறிவிப்பாணையில், "சுப்ரீம் கோர்ட்டு உத்தரவை கருத்தில்கொண்டு, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 8–வது பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ராகுல்காந்தியின் எம்.பி. பதவி தகுதிநீக்க உத்தரவு வாபஸ் பெறப்படுகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

### தில்லி நிர்வாக திருத்த மசோதா நிறைவேற்றம்

- தில்லி நிர்வாக திருத்த மசோதாவுக்கு மாநிலங்களவையில் காரசார விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட் டது.
- மசோதாவுக்கு ஆதரவாக 131 வாக்குகளும், எதிராக 102 வாக்குகளும் பதிவாகின.
- இதையடுத்து, தில்லி நிர்வாக திருத்த மசோதாவுக்கு மாநிலங்களவை ஒப்புதல் அளித்தது.
- இந்த மசோதாவுக்கு மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இரு அவைகளிலும் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதால், குடியரசுத் தலைவரின் சட்ட ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.

- யூனியன் பிரதேசமான தில்லி அரசில் குரூப்–ஏ அதிகாரிகள் நியமனம் மற்றும் பணியிட மாற்றத்துக்கு ஆணையம் அமைக்க மத்திய அரசு கடந்த மே மாதம் அவசரச் சட்டம் கொண்டுவந்தது.

- காவல் துறை, பொது அறிவிப்பு, நில அதிகாரம் ஆகியவை தவிர, பிற துறைகளின் அதிகாரம் தில்லி அரசுக்கே உள்ளது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த ஒரு வாரத்துக்குப் பிறகு இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
- இதன்மூலம் தில்லி அரசு அதிகா ரிகளின் நியமனம், பணியிடமாற்ற முடிவு எடுக்கும் அதிகாரம், தில்லி துணைநிலை ஆளுநருக்கே மீண்டும் வழங்கப்பட்டது.

## மணிப்பூர்: நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வையிட 3 முன்னாள் பெண் நீதிபதிகள்

- மணிப்பூர் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், மறுவாழ்வு வழங்கப்படுவதை மேற்பார்வையிட 3 முன்னாள் உயர்நீதிமன்ற பெண் நீதிபதிகளை உச்சநீதிமன்றம் நியமித்தது.
- இந்தக் குழுவினர் தங்களது அறிக்கையை உச்சநீதிமன்றத்துக்கு நேரடியாகயாக தாக்கல் செய்வார்கள் என்றும், கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூர் மக்களிடையே சட்டத்தின் மீது மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த இந்த நடவடிக்கை உதவும் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது.
- இந்தக் குழுவுக்கு ஜம்மு– காஷ்மீர் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி கீதா மித்தல் தலைமை வகிப்பார்.
- மும்பை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஷாலினி பி ஜோஷி , தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஆஷா மேனன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறுவர்.
- இக்குழுவினர் நிவாரண முகாம்களை நேரில் பார்வையிட்டு நிலைமையை ஆய்வு செய்வர்.

## புனேவில் பிரதமர் மோடிக்கு 200 மீட்டர் உயர சிலை

- 200 மீட்டர் உயரத்தில் புனே நகரில் பிரதமர் மோடிக்கு பிரம்மாண்ட மான சிலை அமையவுள்ளது. இது குஜராத்தில் உள்ள சர்தார் வல்லபபாய் படேல் சிலையை விட உயரமானதாக இருக்கும்.
- மகாராஷ்டிர மாநிலம் புனே அரு கில் மலைநகரமாக வடிவமைக் கப்பட்டிருக்கும் லவாசா சிட்டி அமைந்துள்ளது. இங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகமாக உள்ளது.
- 2010–ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த நகரத்தை மேம்படுத்த ஒப்பந்தம் பெற்றுள்ள தனியார் நிறுவனமான டார்வின் பிளாட் பார்ம் இன்பிராஸ்டிரக்சர்(டிபிஜஎல்) நிறுவனம் சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் விதமாக இங்கு பிரதமர்மோடிக்கு 200 மீட்டர் உயரத்தில் உலகிலேயே மிகப்பெரிய சிலையே நிறுவ முடிவு செய்திருக்கிறது
- குஜராத்தில், சர்தார் வல்லப்பாய் படேலுக்கு மிகப்பெரிய சிலை அமைக்கப்பட்டுள்ளது. இது 182 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. தற்போது பிரதமர்மோடிக்கு அமைக்கப்படும் சிலை 190 மீட்டர் முதல் 200 மீட்டர் உயரம் வரை இருக்கும்.
- நமது நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைக் காக்க பிரதமர் மோடி தன்னால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறார்.
- அவரிடமிருந்து ஒரு தொலை நோக்கு பார்வையை நமது நாடு பெற்றுள்ளது. இந்த சிலை நாட்டுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை போற்றும் வகையில் அமையும்.
- இந்த சிலை முடிவடைந்து திறக்கப்படும் பட்சத்தில் உலகிலேயே மிகவும் உயரமான சிலையாக இது அமையும்.

## SHANMUGAM IAS ACADEMY
YOUR DREAM….! OUR RESPONSE…..!

# தமிழ்நாடு அளவிலான இலவச தேர்வு

# TNPSC GROUP I ,II ,IV


## மனதின் குரல் தேர்வு & அம்ரித் மஹோத்சவ் தேர்வு

மனதின் குரல் தேர்வு ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை

அம்ரித் மஹோத்சவ் தேர்வு ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமை

**STARTS ON – 12 AUGUST 2023**

**ONLINE & OFFLINE TEST**



**FOR REGISTRATION Scan QR code**

9994146662,9994427714

9500785666

@ShanmugamIASAcademy
@ShanmugamIASAcademy
Shanmugamiasacademy
Shanmugamiasacademy

COIMBATORE
550/3, DR NANJAPPA ROAD,
OPPOSITE TOWN BUS STAND,
COIMBATORE GANDHIPURAM, 641009

TIRUNELVELI
25, SUNDARI COMPLEX, NANGUNERI ROAD,
NEAR NEW BUS STAND, TIRUNELVELI, 627005



SHANMUGAM IAS ACADEMY
YOUR DREAM….! OUR RESPONSE…..!
TAMILNADU LEVEL FREE TEST
TNPSC GROUP I ,II ,IV
MANN KI BAAT – TEST & AMRIT MAHOTSAV TEST
MANN KI BAAT TEST ON EVERY 4TH SUNDAY
AMRIT MAHOTSAV TEST ON EVERY 2ND SATURDAY
STARTS ON – 12 AUGUST 2023
ONLINE & OFFLINE TEST
9994146662,9994427714
@ShanmugamIASAcademy
@ShanmugamIASAcademy
Shanmugamiasacademy
Shanmugamiasacademy
COIMBATORE
550/3, DR NANJAPPA ROAD,
OPPOSITE TOWN BUS STAND,
COIMBATORE GANDHIPURAM, 641009
TIRUNELVELI
25, SUNDARI COMPLEX, NANGUNERI ROAD,
NEAR NEW BUS STAND, TIRUNELVELI, 627005